கூடுதல் மாவட்ட நீதிமன்றம், விருதுநகர்

அ.வ.எண்.**222/2024**

நாள் : 04.03.2026

வா.சா.1 – வீராச்சாமி

**பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

நீங்கள் வழக்கு தாக்கல் செய்துள்ள தபசில் சொத்தில் உள்ள 2 ஏக்கர் உள்ளிட்ட 6 ஏக்கர் நிலமானது உங்களுடைய தாத்தா சுப்பாநாயக்கருக்கு பாத்தியப்பட்டது என்றுசொன்னால் - சரிதான். சுப்பாநாயக்கருக்கு எத்தனை வாரிசுகள் இருந்தார்கள் என்றால் - மூன்று வாரிசுகள் இருந்தார்கள். அந்த மூவரின் பெயர் சங்கரப்பநாயக்கர், பெருமாள்நாயக்கர் மற்றும் கிருஷ்ணசாமிநாயக்கர் ஆகியோர் ஆவர். அந்த மூவரில் உங்களது தாத்தா பெருமாள்நாயக்கர் என்றால் - சரிதான். தபசில் சொத்து உள்பட 6 ஏக்கர் நிலத்தை மேற்கண்ட மூவரும் 1944 ம் வருடம் பாகப்பிரிவினை செய்துகொண்டார்கள் என்றால் - சரிதான். மேற்கண்ட பாகப்பிரிவினை ஆவணத்தை நீங்கள் இந்த வழக்கில் வா.சா.ஆ.3 ஆக தாக்கல் செய்திருக்கிறீர்கள் என்றால் - சரிதான்.

மேற்கண்ட சொத்தின் பைமாஸ் நம்பர் 228, புதிய சர்வே நம்பர் 240/1 ஆகும். பைமாஸ் நம்பரிலிருந்து புதிய சர்வே நம்பராக தாவா சொத்து உள்ளிட்ட 6 ஏக்கர் நிலத்தைப்பொறுத்து கோ-ரிலேசன் சான்றிதழ் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் - சரிதான். நீங்கள் வழக்கு தாக்கல் செய்துள்ள தாவா சொத்திற்கும் தாவா சொத்து சர்வே எண்ணிற்கும், பழைய பைமாஸ் நம்பர்க்கும் தொடர்பு இல்லை என்பதனால்தான் சான்றிதழை தாக்கல் செய்யவில்லை என்றால் - SLR Copy தாக்கல் செய்துள்ளேன். உங்களது தாத்தா பெருமாள்நாயக்கருக்கு உங்களது தாய்

ராமலட்சுமி என்றால் சரிதான். உங்களது தாய் ராமலட்சுமிக்கு நீங்கள் மட்டும்தான் ஒரே வாரிசு என்றால் - சரிதான். இந்த தாவா சொத்து பாகப்பிரிவினை ஆவணமான வா.சா.ஆ.3 ல் எங்கு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் - சங்கரப்பநாயக்கர் பாகத்திற்கும் வடக்கு, கிருஷ்ணசாமிநாயக்கர் பாகத்திற்கு தெற்காக குறிப்பிடப்பட்டுள்ளது. நீங்கள் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.3 ல் பக்கம் 4 ல் 3 வது வரியில் " வேப்பிலைப்பட்டி சர்வே எண் 538 ஏக்கர் 6 நடுமயம் ஏக்கர் 2" என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் - சரிதான். நீங்கள் தாக்கல் செய்துள்ள தாவா சொத்தில் உள்ள சர்வே நம்பருக்கும் மேற்படி ஆவணத்தில் உள்ள சர்வே நம்பருக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றால் - சரியல்ல.

உங்களது அம்மா ராமலட்சுமி உங்களது தாத்தவான பொருமாள்நாயக்கர் இறப்பிற்கு பின்பு உங்களது பாட்டியான வீரம்மாளையும், உங்களையும் வாரிசாக விட்டுவிட்டு இறந்துவிட்டார் என்றால் - சரிதான். உங்களது பாட்டி வீரம்மாள் 1982 ம் வருடம் வா.சா.ஆ.8 ன் படி ஒரு உயில் எழுதிவைத்துள்ளார் என்றால் - சரிதான். உங்களது பாட்டி தனது உயிலில் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை உயிலாக எழுதிவைக்கிறேன் என்று சொன்னால் - சரிதான். அந்த வா.சா.ஆ.8 உயில் ஆவணத்தில் சொத்து விவரமாக சர்வே எண்ணோ, நான்குமால் விவரங்களோ குறிப்பிடப்படவில்லை என்றால் - சரிதான். மேற்கண்ட தாவா சொத்தைப் பொறுத்து 1967 ம் வருடம் சின்னபெருமாள் என்பவரிடமிருந்து 2 முதல் 4 வரையுள்ள பிரதிவாதிகளின் தகப்பனாரான ராதாகிருஷ்ணன் கிரையம் பெற்றுள்ளார் என்றால் - அது தவறு.

நீங்கள் திருமணம் எங்கு இருந்தீர்கள் என்றால் - நான் சென்னையில் இருந்தேன். திருமணம் முடிவதற்கு முன்பு எங்கு குடியிருந்தீர்கள் என்றால் -

வெங்கடாசலபுரத்தில் இருந்தேன். உங்களுக்கு எந்த வயதில் திருமணம் நடைபெற்றது என்றால் - 31 வது வயதில் திருமணம் நடைபெற்றது. உங்களது பாட்டி வீரம்மாள் உங்களுடன்தான் இருந்துவந்தார் என்றால் - சரிதான். 2 முதல் 4 வரையுள்ள பிரதிவாதிகளின் தகப்பனாரான ராதாகிருஷ்ணனுக்கு உங்களது பாட்டி வீரம்மாள் வாய்மொழியாக கிரையம் செய்த வைத்த விவரம் தெரியுமா என்றால் - அது தவறு. உங்களது பாட்டி உயிருடன் இருந்த காலத்தில் தாவா சொத்தைப் பொறுத்து 2 முதல் 4 வரையுள்ள பிரதிவாதிகளின் தகப்பனாரான ராதாகிருஷ்ணனுக்கு வாய்மொழியாக கிரையம் செய்துகொடுத்துள்ளார் என்றும், அதிலிருந்து 2 முதல் 4 வரையுள்ள பிரதிவாதிகளின் தகப்பனாரான ராதாகிருஷ்ணனுக்கு பாத்தியப்பட்டது என்றால் - அது பொய் மற்றும் தவறாகும்.

தாவா சொத்தைப் பொறுத்து 2 முதல் 4 வரையுள்ள பிரதிவாதிகளின் தகப்பனாரான ராதாகிருஷ்ணன் மற்றும் 1ம் பிரதிவாதியான இரண்டுபேரிலும் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் - அது தவறு. தபசில் சொத்தைப் பொறுத்து பட்டா நம்பர் 478 1ம் பிரதிவாதி மற்றும் 2 முதல் 4 வரையுள்ள பிரதிவாதிகளின் தகப்பனாரான ராதாகிருஷ்ணன் ஆகியோர்கள் பெயரில் தற்போது வரை தாக்கலாகியுள்ளது மற்றும் தற்போது வரை தபசில் சொத்தின் உடமை மேற்படி 1ம் பிரதிவாதிக்கும், 2 முதல் 4 வரையுள்ள பிரதிவாதிகளின் பெயரில் உள்ளது என்றால் - அது தவறு. மேற்கண்ட 1ம் பிரதிவாதிக்கும், 2 முதல் 4 வரையுள்ள பிரதிவாதிகளின் தந்தை ராதாகிருஷ்ணனின் பெயரில் தவறுதலாக பட்டா தாக்கலாகியுள்ளது என்று நீங்கள் RDO அவர்களிடம் மனு கொடுத்துள்ளீர்கள் என்றால் - சரிதான். மேற்கண்ட மனுவானது SLR விசாரணை சம்மந்தமானது என்பதனால் DRO-டம்

விசாரணைக்காக அனுப்பப்பட்டது என்றால் - சரிதான். மேற்படி DRO டமிருந்து அந்த மனுவானது நீங்களே விசாரித்து சொல்லவேண்டும் என்று குறிப்பிட்டு RDO- டம் அனுப்பப்பட்டது என்றால் - இல்லை, நீதிமன்றத்திடம் பரிகாரம் கோருமாறு அறிவுறுத்தப்பட்டது. RDO மேற்படி SLR திருத்தம் தொடர்பாக மாவட்ட வருவாய் அலுவலர்தான் முடிவெடுக்க முடியும் என்று கூறி மேற்படி மாவட்ட வருவாய் அலுவலரிடமிருந்து தற்போது நீதிமன்றத்திற்கு வந்துள்ளது என்றால் - சரிதான்.

மனுதாரர் குறை கூறும் புலஎண் 240/1 பைமாஸ் எண் 228 க்கான சரியான ஆவணங்கள் சமர்ப்பிக்கவில்லை இவ்வாறான நிலையில் மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள புலஎண் 240/1 நடைபெற்ற 6 உட்பிரிவுகளை பட்டா பரிமாற்ற உத்தரவினை இரத்த செய்ய கோரிய கோரிக்கையை நிராகரித்து ஆணையிடப்படுகிறது வா.சா.ஆ.24 ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் - அது தவறு. மேற்கண்ட உத்தரவானது சரியான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்பதனால் பிறப்பிக்கப்பட்ட விவரம் உங்களுக்கு தெரியும் என்றும், நீங்கள் வழக்கிற்காக தெரியாது என்று மறைத்து சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் - அது தவறு. மேற்கண்ட மாவட்ட வருவாய் அலுவலர் உத்தரவு பிறப்பிப்பதற்கு பின்புதான் நீங்கள் நீதிமன்றத்தில் தபசில் சொத்துபொறுத்து வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் - சரிதான். நீங்கள் தாக்கல் செய்துள்ள தபசில் சொத்திற்கும், உங்கள் பிராதில் குறிப்பிட்டுள்ள பாகப்பிரிவினை சொத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும், நீங்கள் வழக்கிற்காக அவ்வாறு தவறுதலாக குறிப்பிட்டு சொல்கிறீர்கள் என்றால் - அது தவறு. தாவா சொத்தைப் பொறுத்து 1 முதல் 4 பிரதிவாதிகளின் அனுபவத்தில் இருந்து வந்ததனால் அவர்களது

பெயரில் பட்டா ஏற்பட்டு இருந்துள்ள விவரம் தெரிந்தும் இந்த தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் - அது தவறு. எனவே நீங்கள் இந்த வழக்கில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கதக்கதல்ல என்றால் - அது தவறு. மேற்படி வழக்கானது தள்ளுபடி செய்யதக்கது என்றால் - சரியல்ல.

**மறு விசாரணை**

நீங்கள் உங்களது குறுக்கு விசாரணையில் " வேப்பிலைப்பட்டி சர்வே எண் 538 ஏக்கர் 6 நடுமயம் ஏக்கர் 2" என்று குறிப்பிடப்பட்டுள்ளதில் வா.சா.ஆ.3 ல் உண்மையில் உள்ள வரிகள் என்னவென்றால் எட்டையாபுரம் ஜமீன் வேப்பிலைப்பட்டி வணிகம் எட்டுவார் வட்டம் கிராம சர்வே எண் என்றுதான் உள்ளது என்றால் - சரிதான். அதேபோல் வா.சா.ஆ.3 ல் உங்களுடைய மூன்று தாத்தாக்களுக்கும் ஒதுக்கப்பட்ட சொத்துக்களைப் பொறுத்து நான்குமால் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் - சரிதான். வா.சா.ஆ.3 ஆன பாகப்பிரிவினை ஆவணத்தில் மேற்படி மூன்று தாத்தாக்களும் 2 சொத்துக்களை சரிபாகமாக பிரித்து கொண்டார்கள் என்றால் - சரிதான்.

**திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சாட்சிசொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**/Sd/ S.K.Angalaeswari**
**கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**விருதுநகர்.**